| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **75/2023** |
| **DATE** | : | **21.11.2025** |
| **பெயர்** | : | **C.P. சீனுவாசன்** |
| **தந்தை பெயர்** | : | |

**<u>வாதி தரப்பு பி.வா. சா.1 குறுக்கு விசாரணை</u>**

1. வாதி C.P.ஜெயபிரகாசம் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார். C.P.ஜெயபிரகாசம் எனது தம்பி ஆவார். வாதி கிரையம் பெற்ற சொத்து நான்கில் ஒரு பங்கு தெரு பாகம். அந்த தெரு பாகத்தில் வாதி முழுமையாக கட்டிடம் 20 அடிக்கு 16 அடியில் கட்டிடம் கட்டியுள்ளார். சுவாதி பவர் டுல்ஸ் என்ற பெயரில் வியாபாரம் நடத்தி வருகிறார். வாதி கிரையம் வாங்கிய சொத்தின் வடவண்டை பக்கம் விளக்கடி பெருமாள் கோவில் தெரு உள்ளது. மேற்படி தெருவில் வீடுகளும், கடைகளும், சத்திரங்களும் உள்ளது. தாவா சொத்தின் மேலண்டை பக்கம் சுமார் 100 மீட்டரில் பேருந்து நிறுத்தம் உள்ளது. தாவா சொத்தை சுற்றி பஜார் பகுதி மாதிரி உள்ளது என்றால் சரிதான்.

2. தாவா சொத்து மாதிரி அதே பகுதியில் முன்புற பகுதியில் கடைகளும், பின்புற பகுதியில் வீடுகளும் அமைந்துள்ளது என்றால் சரிதான். வாதி கடை கட்டிடத்தின் கீழண்டை பக்கம் 3 அடி நாராச பகுதி உள்ளது. அந்த பகுதிக்கு பின்புறம் எனது வீடு உள்ளது. 2.3 பிரதிவாதிகள் எனது மகன்கள். வாதி கட்டியுள்ள கடைக்கு சுமார் 15 அடி தள்ளி தார் ரோடு அமைந்துள்ளது. மேற்படி 15 அடியில் தான் வாதியின் கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் மற்றும் அவரது வாகனங்களை நிறுத்த இடம் உள்ளது என்றால் சரிதான்.

3. வாதி கட்டிடம் கட்ட ஆரம்பித்த போது நாங்கள் புகார் கொடுப்பதற்கு முன்பு வாதி புகார் கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் காவல் நிலையத்தில் விசாரணையின் போது 8 அடியில் 10 அடி பாகம் முன்புறம் விடுவதாக வாதி எழுதி கொடுத்தார். மேற்படி விவரத்தை எனது எதிருரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான்

சொல்வது தவறு அவ்வாறு விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை நாங்கள் கட்டிடம் கட்டும் போது வாதியை மிரட்டி மேற்படி எழுதி வாங்கினோம் என்றால் சரியல்ல. எனக்கு வாதி அவர் வண்டி விடும் இடத்தில் வண்டி விடுவதில் எந்த பிரச்சனையும் இல்லையா என்று சொன்னால் வாதி தான் வாங்கிய சொத்தில் முழுவதும் கட்டிடம் கட்டியுள்ளார், மாநகராட்சியின் இடத்தில் தான் வண்டிகள் நிறுத்தப்படுகிறது.

4. வாதியின் கடைக்கு முன்புறம் எங்களது மகன்கள் வண்டி நிறுத்துகிறோம் என்றால் முன்புறத்தில் ஓரமாக நிறுத்துகிறோம். கடை கட்டிடத்திற்கு பக்கத்தில் மின்கம்பம் உள்ளது அதை தாண்டி தான் எங்களது நாராசம் உள்ளது என்றால் சரிதான். மின்கம்பத்திற்கு இடது பக்கத்தில் வாதியின் கடை ஆரம்பிக்கிறது என்று சொன்னால் சரியல்ல. எங்களது வண்டியை நாங்கள் நாராசத்தை ஒட்டியுள்ள மின்கம்பத்தை தாண்டி தான் விடுகிறோம். எங்களது வண்டியை தொடர்ச்சியாக ஒரு நாள் முழுவதும் நிறுத்தை வைக்கிறோம் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும் போது பழுதடைந்த இரண்டு வாகனங்களை வாதியின் கடைக்கு முன்புறம் நிறுத்தினோம் என்றால் சரிதான். அது பற்றி வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த இரண்டு வாகனங்கள் எங்களுடையது தான் . புகார் கொடுத்தற்கு பிறகு அந்த இரு வண்டிகளையும் வேறு இடத்திற்கு மாற்றிவிட்டோம்.

5. வாதி அவரது கடையில் சி.சி.டி.வி கேமராக்களை பொறுத்தியுள்ளார். வா.சா.ஆ–9 ஆவணம் புகைப்படம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அதில் காட்டப்பட்டுள்ள வலது பக்கத்தில் உள்ள நான்கு இரு சக்கர வாகனங்களும் என்னுடையது தான். வா.சா.ஆ.6 புகைப்படம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அதில் காட்டப்பட்டுள்ள இரண்டு இரு சக்கர வாகனங்களும் எனது தம்பியுடையது, அவர் பாகம் அடுத்து உள்ளது. வா.சா.ஆ–7 புகைப்படம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அதில் காட்டப்பட்டுள்ளதில் இரண்டு வண்டிகள் மட்டும் எங்களுடையது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் வாதி

கிரையம் பெற்ற சொத்திற்கும் சம்மந்தம் கிடையாது என்றால் எங்களது பாகம் சொத்திற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோம். அந்த ஆவணங்களில் முன்புற பாகம் என்ற எந்த வாசகமும் கிடையாது என்றால் சரியல்ல.

6. நாங்கள் முன்புறத்தில் பாகம் கேட்கிறோம் என்று சொன்னால் அது மாநகராட்சிக்கு சொந்தமான இடம், பொது இடத்தில் வண்டி நிறுத்த பிரச்சனை செய்யக்கூடாது என்று தான் வழக்காடுகிறோம். நான் எனது தம்பியிடம் வாதிக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பு கிரையம் கேட்டேன், ஆனால் அவர் கேட்ட தொகை சரிவராததால் விட்டுவிட்டோம். நாங்கள் கிரையம் வாங்க நினைத்த இடத்தை வாதி கிரையம் வாங்கியதால் அவருக்கு நாங்கள் தொல்லை கொடுத்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு வண்டியை நிறுத்த போதுமான இடம் இருந்தும் வேண்டுமென்றே வாதியின் கடை முன்பு வண்டிகளை நிறுத்தி பிரச்சனை செய்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. தொடர்ந்து வாதிக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் எங்களது அதிகாரத்தை பயன்படுத்தி வாதியை எழுதி கொடுக்க கேட்டதால் தான் அவர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. பிரச்சனைக்குண்டான பகுதி நாங்கள் வண்டி நிறுத்த கோரும் பகுதி மாநகராட்சிக்கு சொந்தமான பகுதி.

7. வாதி முன்புற சொத்தை கிரையம் வாங்கியதால் சொத்தின் முன்புள்ள இடத்தை அனுபவிக்க அவருக்கு மட்டும் தான் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த இடத்தில் தொடர்ச்சியாக எங்களது வண்டிகளை நிறுத்தி வாதியுடன் பிரச்சனை செய்வதற்கு எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வாதி கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு தொந்தரவு கொடுத்து வாதியின் வியாபாரத்தை கெடுக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி அவருக்கு சாதகமாக தீர்ப்பாக வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.